


# Get Down, Rocky!

## கீழே இறங்கு ராக்கி!

**Author:** Annie Besant
**Illustrator:** Sandhya Prabhat
**Translator:** N. Chokkan

ENGLISH

தமிழ்

கீழே இறங்கு ராக்கி! (Tamil), translated by N. Chokkan, based on original story Get Down, Rocky! (English), written by Annie Besant, illustrated by Sandhya Prabhat, supported by Oracle, published by Pratham Books (© Pratham Books, 2019) under a CC BY 4.0 license on StoryWeaver. Read, create and translate stories for free on www.storyweaver.org.in. The book is recompiled by Deepak Dennison as a bilingual book, published by Infant Jesus Matric Hr Sec School under a CC BY-SA 4.0 license.



“Who let that goat out?” Ramesh, the coconut seller shouted.

Rocky had done it AGAIN!

“இந்த ஆட்டை யாருப்பா வெளியே விட்டது?” என்று இளநீர் விற்கும் ரமேஷ் கத்தினார்.

ஆம், **மீண்டும்** ராக்கி வம்பில் மாட்டிக்கொண்டது!

“Rocky! Get down from there,” Rose yelled.

“*Baaaaaa!* Silly humans,” Rocky bleated.

How could they expect him to jump down from the roof of a church? He wasn’t supergoat!

“ராக்கி! அங்கிருந்து கீழே இறங்கு” என்று கத்தினாள் ரோஸ்.

“*ம்மே*... முட்டாள் மனிதர்கள்!” என்று ராக்கி கத்தியது.

பின்னே, இத்தனை உயரமான தேவாலயக் கூரையிலிருந்து ராக்கியால் எப்படிக் கீழே குதிக்கமுடியும்! ராக்கி என்ன சூப்பர் ஆடா?





“How did he get up
there?” asked Appa.

“He was trying to eat
that hen,” Rose said.

“ராக்கி எப்படி அங்கே
போனது?” என்று கேட்டார்
ரோஸின் அப்பா.

“அது அந்தக் கோழியை
சாப்பிட முயற்சி
செய்துகொண்டிருந்தது”
என்றாள் ரோஸ்.

“Rooster, not hen,” Amma corrected her.

“But that’s not even a real rooster,” said Appa.

“அது கோழி இல்லை, சேவல்!” என்று திருத்தினார் அம்மா.

“ஆனால், அது உண்மையான சேவல் கூட இல்லை” என்றார் அப்பா.





“Can we just get Rocky down, please?” Rose begged.

“I have an idea!” said Jaya, the banana-leaf seller.

“முதலில் ராக்கியை எப்படியாவது கீழே கொண்டுவரப் பார்க்கலாமா? ப்ளீஸ்!” என்று கெஞ்சினாள் ரோஸ்.

“எனக்கு ஒரு யோசனை!” என்றார் வாழை இலை விற்கும் ஜெயா.



BUT Rocky wanted to eat the banana leaves.

“I have a better idea!” said Mani, the shopkeeper.

ஆனால், ராக்கி வாழை இலைகளைத் தின்னப் பார்த்தது.

“என்னிடம் இன்னொரு நல்ல யோசனை இருக்கிறது” என்றார் கடைக்காரர் மணி.



BUT Rocky wanted to eat the boxes.

“I have a better idea,” said Peter, the carpenter.

ஆனால், ராக்கி பெட்டிகளையும் தின்னப் பார்த்தது.

“என்னிடம் இன்னொரு நல்ல யோசனை இருக்கிறது” என்றார் தச்சர் பீட்டர்.

“BE CAREFUL, ROCKY!” shouted Rose.

“பார்த்து கவனமாக வா, ராக்கி!” என்று கத்தினாள் ரோஸ்.





*WHOOSH!*

Rocky slid down the ramp.

*சொய்ங்ங்!*

ராக்கி சறுக்கியபடியே
கீழே இறங்கியது.



“Don’t try to eat that rooster again!” Rose giggled.

But what did Amma, Appa, the coconut seller, the banana-leaf seller, the shopkeeper and the carpenter say?

“ராக்கி, திரும்பவும்
அந்த சேவலை சாப்பிட
முயற்சிக்காதே!” என்று
சிரித்தாள் ரோஸ்.

ஆனால், அவளுடைய அம்மா,
அப்பா, இளநீர் விற்பவர், வாழை
இலை விற்பவர், கடைக்காரர்,
தச்சர் எல்லோரும் சொன்ன
ஒரே விஷயம் என்ன தெரியுமா?



“Don’t let Rocky out again!”

“ரோஸ், திரும்பவும் ராக்கியை இப்படி
வெளியே விடாதே!”

**CREATIVE CORNER**

How would you have brought Rocky down without using a ladder?

ஏணியை பயன்படுத்தாமல் எவ்வாறு ராக்கியை நீங்கள் கீழே வரவைத்திருப்பீர்கள்?